# PAPER-III
# TAMIL

**Signature and Name of Invigilator**

1. (Signature) ___________________________

   (Name) ___________________________

2. (Signature) ___________________________

   (Name) ___________________________

OMR Sheet No. : ..........................................

(To be filled by the Candidate)

Roll No. | | | | | | | | |

(In figures as per admission card)

Roll No.___________________________

(In words)

| D | 2 | 6 | 1 | 3 |
|---|---|---|---|---|

Time : **2 $^1/_2$** hours] [Maximum Marks : **150**

Number of Pages in this Booklet : **16** Number of Questions in this Booklet : **75**

## Instructions for the Candidates

1. Write your roll number in the space provided on the top of this page.
2. This paper consists of seventy five multiple-choice type of questions.
3. At the commencement of examination, the question booklet will be given to you. In the first 5 minutes, you are requested to open the booklet and compulsorily examine it as below :
   (i) To have access to the Question Booklet, tear off the paper seal on the edge of this cover page. Do not accept a booklet without sticker-seal and do not accept an open booklet.
   (ii) **Tally the number of pages and number of questions in the booklet with the information printed on the cover page. Faulty booklets due to pages/questions missing or duplicate or not in serial order or any other discrepancy should be got replaced immediately by a correct booklet from the invigilator within the period of 5 minutes. Afterwards, neither the Question Booklet will be replaced nor any extra time will be given.**
   (iii) After this verification is over, the OMR Sheet Number should be entered on this Test Booklet.
4. Each item has four alternative responses marked (A), (B), (C) and (D). You have to darken the circle as indicated below on the correct response against each item.
   **Example :** Ⓐ Ⓑ ● Ⓓ
   where (C) is the correct response.
5. Your responses to the items are to be indicated in the **OMR Sheet given inside the Booklet only.** If you mark at any place other than in the circle in the OMR Sheet, it will not be evaluated.
6. Read instructions given inside carefully.
7. Rough Work is to be done in the end of this booklet.
8. If you write your Name, Roll Number, Phone Number or put any mark on any part of the OMR Sheet, except for the space allotted for the relevant entries, which may disclose your identity, or use abusive language or employ any other unfair means such as change of response by scratching or using white fluid, you will render yourself liable to disqualification.
9. You have to return the test question booklet and Original OMR Sheet to the invigilators at the end of the examination compulsorily and must not carry it with you outside the Examination Hall. You are, however, allowed to carry duplicate copy of OMR Sheet on conclusion of examination.
10. **Use only Blue/Black Ball point pen.**
11. **Use of any calculator or log table etc., is prohibited.**
12. **There is no negative marks for incorrect answers.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. इस पृष्ठ के ऊपर नियत स्थान पर अपना रोल नम्बर लिखिए ।
2. इस प्रश्न-पत्र में पचहत्तर बहुविकल्पीय प्रश्न हैं ।
3. परीक्षा प्रारम्भ होने पर, प्रश्न-पुस्तिका आपको दे दी जायेगी । पहले पाँच मिनट आपको प्रश्न-पुस्तिका खोलने तथा उसकी निम्नलिखित जाँच के लिए दिये जायेंगे, जिसकी जाँच आपको अवश्य करनी है :
   (i) प्रश्न-पुस्तिका खोलने के लिए उसके कवर पेज पर लगी कागज की सील को फाड़ लें । खुली हुई या बिना स्टीकर-सील की पुस्तिका स्वीकार न करें ।
   (ii) **कवर पृष्ठ पर छपे निर्देशानुसार प्रश्न-पुस्तिका के पृष्ठ तथा प्रश्नों की संख्या को अच्छी तरह चैक कर लें कि ये पूरे हैं । दोषपूर्ण पुस्तिका जिनमें पृष्ठ/प्रश्न कम हों या दुबारा आ गये हों या सीरियल में न हों अर्थात् किसी भी प्रकार की त्रुटिपूर्ण पुस्तिका स्वीकार न करें तथा उसी समय उसे लौटाकर उसके स्थान पर दूसरी सही प्रश्न-पुस्तिका ले लें । इसके लिए आपको पाँच मिनट दिये जायेंगे । उसके बाद न तो आपकी प्रश्न-पुस्तिका वापस ली जायेगी और न ही आपको अतिरिक्त समय दिया जायेगा ।**
   (iii) इस जाँच के बाद OMR पत्रक की क्रम संख्या इस प्रश्न-पुस्तिका पर अंकित कर दें ।
4. प्रत्येक प्रश्न के लिए चार उत्तर विकल्प (A), (B), (C) तथा (D) दिये गये हैं । आपको सही उत्तर के वृत्त को पेन से भरकर काला करना है जैसा कि नीचे दिखाया गया है ।
   **उदाहरण :** Ⓐ Ⓑ ● Ⓓ
   जबकि (C) सही उत्तर है ।
5. प्रश्नों के उत्तर **केवल प्रश्न पुस्तिका के अन्दर दिये गये OMR पत्रक पर ही** अंकित करने हैं । यदि आप OMR पत्रक पर दिये गये वृत्त के अलावा किसी अन्य स्थान पर उत्तर चिह्नांकित करते हैं, तो उसका मूल्यांकन नहीं होगा ।
6. अन्दर दिये गये निर्देशों को ध्यानपूर्वक पढ़ें ।
7. कच्चा काम (Rough Work) इस पुस्तिका के अन्तिम पृष्ठ पर करें ।
8. यदि आप OMR पत्रक पर नियत स्थान के अलावा अपना नाम, रोल नम्बर, फोन नम्बर या कोई भी ऐसा चिह्न जिससे आपकी पहचान हो सके, अंकित करते हैं अथवा अभद्र भाषा का प्रयोग करते हैं, या कोई अन्य अनुचित साधन का प्रयोग करते हैं, जैसे कि अंकित किये गये उत्तर को मिटाना या सफेद स्याही से बदलना तो परीक्षा के लिये अयोग्य घोषित किये जा सकते हैं ।
9. आपको परीक्षा समाप्त होने पर प्रश्न-पुस्तिका एवं मूल OMR पत्रक निरीक्षक महोदय को लौटाना आवश्यक है और परीक्षा समाप्ति के बाद उसे अपने साथ परीक्षा भवन से बाहर न लेकर जायें । हालांकि आप परीक्षा समाप्ति पर OMR पत्रक की डुप्लीकेट प्रति अपने साथ ले जा सकते हैं ।
10. **केवल नीले/काले बाल प्वाईंट पेन का ही इस्तेमाल करें ।**
11. **किसी भी प्रकार का संगणक (कैलकुलेटर) या लाग टेबल आदि का प्रयोग वर्जित है ।**
12. **गलत उत्तरों के लिए कोई नकारात्मक अंक नहीं हैं ।**

**TAMIL**
**தமிழ்**
**Paper-III**
**தாள் - III**

**Note :** This paper contains **seventy five (75)** objective type questions of **two (2)** marks each. **All** questions are compulsory.

**குறிப்பு :** இவ்வினாத்தாள் எழுபத்தைந்து (75) விடைதெரி வினாக்களைக் கொண்டது. ஒவ்வொரு வினாவிற்கும் இரண்டு (2) மதிப்பெண்கள் உண்டு. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

**1.** ஆனந்தம் என்பது
(A) செய்யுள் குற்றம் (B) செய்யுள் இன்பம்
(C) செய்யுள் அழகு (D) செய்யுள் நடை

**2.** நெய்தல் நிலத்துப்பண்
(A) தோடி (B) பைரவி
(C) செவ்வழி (D) சதாரி

**3.** ஆசிரிய வசனம் என்பது
(A) பதப்பொருள்
(B) மேற்கோள்
(C) உரை
(D) பாட்டுடைச் செய்யுளின் இடையே வரும் உரைநடை

**4.** மிகுதியால் பெயர் பெற்ற நூல்
(A) ஆரியப்படலம் (B) சாதவாகனம்
(C) களவியல் (D) சிந்தாமணி

**5.** 13 அடி முதல் 31 அடி வரை உள்ள பாடல்களைக் கொண்டது
(A) அகநானூறு (B) கலித்தொகை
(C) நற்றிணை (D) புறநானூறு

**6.** ஓர் அரசமரபின் வரலாற்றைக் கூறுவது
(A) மலைபடுகடாம் (B) முல்லைப்பாட்டு
(C) பதிற்றுப்பத்து (D) மதுரைக்காஞ்சி

**7.** குடக்கு என்பது
(A) மேற்கு (B) தெற்கு
(C) வடக்கு (D) கிழக்கு

**8.** நெல்லும் உப்பும் நேரே ஊரீர் கொள்ளீ ரோவெனச் சேரிதொளும் நுவலும்...... எனும் பாடலடிகள் இடம் பெற்ற நூல்
(A) பட்டினப்பாலை (B) ஐங்குறுநூறு
(C) குறுந்தொகை (D) அகநானூறு

**9.** 'நெருநல் உளனொருவன்' - எனும் குறளில் இடம் பெறும் 'நெருநல்' என்பதன் பொருள்
(A) நாளை (B) நாளை மறுநாள்
(C) நேற்று (D) இன்று

10. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அறக்கருத்துகளைக் கூறும் நூல்களின் எண்ணிக்கை
   (A) 11   (B) 8
   (C) 9   (D) 7

11. தமிழன்னையின் அணிகலன்களாக ஐம்பெரும் காப்பியங்களைக் குறிப்பிடும் கவிஞர்
   (A) சோமசுந்தர பாரதியார்
   (B) கோபாலகிருஷ்ண பாரதியார்
   (C) சுத்தானந்த பாரதியார்
   (D) சுப்பிரமணிய பாரதியார்

12. விருத்தப் பாவால் இயற்றப்பட்ட காவியம்
   (A) சிலப்பதிகாரம்   (B) மணிமேகலை
   (C) பெருங்கதை   (D) சூளாமணி

13. தஞ்சைவாணன் கோவையின் ஆசிரியர்
   (A) நாற்கவிராச நம்பி
   (B) பொய்யாமொழியார்
   (C) பொய்கையாழ்வார்
   (D) மாணிக்கவாசகர்

14. திருவாய்மொழிக்கு முதன்முதல் உரை வகுத்தவர்
   (A) பெரியவாச்சான் பிள்ளை   (B) நஞ்சீயர்
   (C) நம்பிள்ளை   (D) ஆளவந்தார்

15. பெயர்ச்சொல் என்பது
   (I) ஒன்றன் பெயரைக் குறிப்பது   (II) காலம் காட்டுவது
   (III) வேற்றுமை உருபை ஏற்பது   (IV) இருதிணைக்கும் உரியது
   இவற்றுள்
   (A) அனைத்தும் சரி
   (B) I, III, IV சரி
   (C) அனைத்தும் சரியன்று
   (D) II, III, IV சரி

16. புறநிலை வாழ்த்து என்பது
   (I) வழிபடு தெய்வம் உன்னைப் பாதுகாக்கட்டும் என வரும்
   (II) பழிதீர் செல்வமொடு வழிவழி சிறக்க என வரும்
   (III) ஆசிரியம், வெண்பாவால் வரும்
   (IV) கலி, வஞ்சிப் பாவால் வரும்
   இவற்றுள்
   (A) அனைத்தும் சரி   (B) I, II, IV சரி
   (C) I,II, III சரி   (D) அனைத்தும் தவறு

**17.** காப்பிய நடைஎன்பது

(I) ஒருதிறப் பாட்டினும் பலதிறப்பாட்டினும் அமைவது

(II) உரையும் பாடையும் விரவி வருவது

(III) ஐவகைச் சந்தி உடையது

(IV) நாற்பொருள் பயப்பது

இவற்றுள்

(A) I, II சரி (B) II, III சரி

(C) III,IV சரி (D) அனைத்தும் சரி

**18.** அகப் பாடல்களில்

(I) திணை மயக்குறுதலும் கடிநிலை இல

(II) நிலன் ஒருங்கு மயங்குதல் இல

(III) உரிப்பொருள் மயங்கவும் பெறும்

(IV) முதற், கருப் பொருள் மயங்கும்

இவற்றுள்

(A) அனைத்தும் சரி (B) அனைத்தும் சரியன்று

(C) I,II, IV சரி (D) I, II, III சரி

**19.** தமிழில் நிகண்டுகள்

(I) அகராதிகளின் வருகைக்கு முன்னர் மட்டுமே இயற்றப்பட்டன

(II) மனப்பாடம் செய்வதற்கு உகந்த வகையில் செய்யுள் வடிவில் இயற்றப்பட்டன

(III) இலக்கியங்களைப் படிக்கவும், படைக்கவும் உகந்த வகையில் அமைந்தன

(IV) பெரும்பாலும் பொருளடிப்படையில் பாகுபாடு உடையன

இவற்றுள்

(A) I, II, IV சரி (B) II, III, IV சரி

(C) I,III,IV சரி (D) அனைத்தும் சரி

**20.** பாட்டியல் நூல்கள் பொதுவாக

(I) சிற்றிலக்கியங்களின் இலக்கணங்களைக் கூறுகின்றன

(II) வடமொழிச் செல்வாக்கின் விளைவுகளாக அமைந்துள்ளன

(III) பகுத்தறிவுக்கு ஒவ்வாத கருத்துகளைக் கொண்டவை

(IV) தமிழிலக்கண வளர்ச்சியின் ஒரு காலகட்டத்தைப் படம்பிடிப்பன

இவற்றுள்

(A) I,II,III சரி (B) I, II, IV சரி

(C) அனைத்தும் சரியன்று (D) அனைத்தும் சரி

**21.** சுவாமி விபுலானந்தர்

(I) மதங்க சூளாமணியின் ஆசிரியர்

(II) யாழ்நூலின் ஆசிரியர்

(III) பிளாட்டோவின் நூலைத் தமிழில் மொழி பெயர்த்தவர்

(IV) அரிசுடாட்டிலின் கவிதையியலைத் தமிழில் தந்தவர்

இவற்றுள்

(A) அனைத்தும் சரி (B) I, II, III சரி

(C) I,II,IV சரி (D) I,III, IV சரி

**22.** பம்மல் சம்பந்த முதலியார்

(I) தமிழ்நாடகத் தந்தை என்றழைக்கப்படுபவர்
(II) தமிழ்நாடகத் தலைமையாசிரியர் என்று போற்றப்படுபவர்
(III) சுகுண விலாச சபை ஏற்படுத்தியவர்
(IV) காளிதாசரின் சாகுந்தலத்தைத் தமிழ் நாடகமாக மாற்றியமைத்தவர்

இவற்றுள்

(A) அனைத்தும் சரி (B) II, III, IV சரி
(C) I, II, III சரி (D) I, III, IV சரி

**23.** தேசிக விநாயகம் பிள்ளை

(I) கவிமணி எனப் போற்றப்படுபவர்
(II) ஆசியஜோதி, உமர்கய்யாம் நூல்களின் மொழி பெயர்ப்பாளர்
(III) மங்கையராய்ப் பிறப்பதற்கே - நல்ல மாதவம் செய்திட வேண்டும் எனப் பாடியவர்
(IV) மலைக்கள்ளன் எனும் புதினத்தைப் படைத்தவர்

இவற்றுள்

(A) I, II, IV சரி (B) அனைத்தும் சரி
(C) I, II, III சரி (D) II, III, IV சரி

**24.** குணங்குடி மஸ்தான் சாகிபு

(I) இசுலாமியத் தாயுமானவர் என அழைக்கப்பட்டார்
(II) சுல்தான் அப்துல் காதிர் எனும் இயற்பெயருடையவர்
(III) குணங்குடி நாதர் பதிற்றுப்பத்தாந்தி இயற்றியவர்
(IV) அத்தர் வணிகம் செய்தவர்

இவற்றுள்

(A) அனைத்தும் சரி (B) II, III, IV சரி
(C) I, II,III சரி (D) I, II, IV சரி

**25.** வேதநாயக சாஸ்திரி

(I) "நோவாவின் கப்பல்" எழுதித் தஞ்சை சரபோஜி மன்னரிடம் பரிசு பெற்றவர்
(II) பெத்தலேகம் குறவஞ்சி எழுதி ஞானதீபக் கவிராயர் எனும் பட்டம் பெற்றவர்
(III) ஞானக் கும்மி, ஞானநொண்டி நாடகம் எழுதியவர்
(IV) திருத்தமுறைக் கிறித்தவ ஆலயங்களில் பாடப் பெறும் பாடல்கள் பல படைத்தவர்

இவற்றுள்

(A) அனைத்தும் சரி (B) I, II, III சரி
(C) II, III,IV சரி (D) I, III, IV சரி

**26.** மீனாட்சி சுந்தரம் பிள்ளை

(I) உ.வே.சா.வின் ஆசிரியர்
(II) திருவாவடுதுறை ஆதீன வித்துவான்
(III) சேக்கிழார் பிள்ளைத் தமிழை இயற்றியவர்
(IV) கீர்த்தனை இலக்கியங்கள் இயற்றியவர்

இவற்றுள்

(A) I, III, IV சரி (B) அனைத்தும் சரி
(C) I, II, III சரி (D) II, III, IV சரி

**27.** *வள்ளலார்*

(I) *ஆன்ம நேய ஒருமையை வலியுறுத்தியவர்*

(II) *திருவருட்பா இயற்றியவர்*

(III) *மனுமுறை கண்ட வாசகம் எனும் உரைநடை நூலின் ஆசிரியர்*

(IV) *'கடை விரித்தேன் கொள்வாரில்லை' எனக் கூறியவர்*

*இவற்றுள்*

(A) *அனைத்தும் சரி* (B) I, II, III *சரி*

(C) II, III, IV *சரி* (D) I, III, IV *சரி*

**28.** *தெலுங்கு மொழி*

(I) *தென் திராவிட மொழிகளுள் ஒன்று*

(II) *திராவிட மொழிகளில் அதிகமாகப் பேசப்படும் மொழி*

(III) *சுந்தர மொழி என்று பாரதியாரால் போற்றப்பட்டது*

(IV) *தனிப்பல்கலைக்கழகம் உடைய மொழி*

*இவற்றுள்*

(A) *அனைத்தும் சரி* (B) I, II, III *சரி*

(C) II, III, IV *சரி* (D) I, III, IV *சரி*

**29.** *தமிழ் மொழி*

(I) *இசைவளம் மிக்கது*

(II) *103 பண்களைக் கொண்டது*

(III) *பதினோராயிரம் இராகங்களைக் கொண்டது*

(IV) *இசைக்களஞ்சியம் கண்டது*

*இவற்றுள்*

(A) *அனைத்தும் சரி* (B) I, II, III *சரி*

(C) II, III, IV *சரி* (D) I, III, IV *சரி*

**30.** *கல்கி*

(I) *இதழாசிரியர்*

(II) *சுதந்திரப் போரட்ட வீரர்*

(III) *வரலாற்று நாவலாசிரியர்*

(IV) *பொன்னியின் செல்வன் புதினத்திற்குச் சாகித்ய அகடமி விருது பெற்றவர்*

*இவற்றுள்*

(A) *அனைத்தும் சரி* (B) I, II, III *சரி*

(C) I, III, IV *சரி* (D) II, III, IV *சரி*

**31.** *<u>உறுதிக்கூற்று</u>: (உ) தமிழ்மொழி ஒட்டு நிலை அமைப்புடையது*
*<u>காரணம்</u>: (கா) தமிழில் அடிச்சொல்லுடன் பிறசொல்லோ விகுதியோ சேர்வதில்லை*

(A) *(உ) (கா) இரண்டும் சரி*

(B) *(உ) (கா) இரண்டும் சரியல்ல*

(C) *(உ) சரி (கா) சரியன்று*

(D) *(உ) சரியன்று , (கா) சரி*

32. <u>உறுதிக்கூற்று</u>: (உ) செஞ்ஞாயிறு எனில் கருஞாயிறு, வெண்ஞாயிறு உள எனக் கொள்ளலாகாது
<u>காரணம்</u>: (கா) இனச்சுட்டில்லாப் பண்பு கொள் பெயர்க் கொடை வழக்கா றல்ல
(A) (உ) (கா) இரண்டும் சரி
(B) (உ) (கா) இரண்டும் சரியல்ல
(C) (உ) சரி (கா) சரியன்று
(D) (உ) சரியன்று , (கா) சரி

33. <u>உறுதிக்கூற்று</u>: (உ) நெடுநல்வாடை என்பது பத்துப் பாட்டில் இடம் பெறும் இலக்கியம்
<u>காரணம்</u>: (கா) பிற காலத்தைவிட நெடிதாயும் நல்லதாயும் விளங்குவது வாடைக்காலம்
(A) (உ) (கா) இரண்டும் சரி
(B) (உ) சரி ; (கா) சரியன்று
(C) (உ) : (கா) இரண்டும் சரியல்ல
(D) (உ) சரியன்று , (கா) சரி

34. <u>உறுதிக்கூற்று</u>: (உ) பெருந்திணைக்குப் புறமாக அமைவது வெட்சி .
<u>காரணம்</u>: (கா) இரண்டும் நிலையாமை பற்றியவை
(A) (உ) சரி (கா) சரியன்று
(B) (உ); (கா) இரண்டும் சரியல்ல
(C) (உ) (கா) இரண்டும் சரி
(D) (உ) சரியன்று (கா) சரி

35. <u>உறுதிக்கூற்று</u>: (உ) பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் புறம்பற்றியது களவழி நாற்பது.
<u>காரணம்</u>: (கா) ஏர்க்களம் பற்றிப் பாடிய நூல் அது.
(A) (உ), (கா) இரண்டும் சரி
(B) (உ), (கா) இரண்டும் சரியல்ல
(C) (உ) சரி (கா) சரியன்று
(D) (உ) சரியன்று (கா) சரி

36. <u>உறுதிக்கூற்று</u>: (உ) கார் நாற்பது என்பது அகத்திணை இலக்கியம்.
<u>காரணம்</u>: (கா) அது குறிஞ்சித் திணையைப் பற்றிய நூல்
(A) (உ), (கா) இரண்டும் சரி
(B) (உ) , (கா) இரண்டும் சரியல்ல
(C) (உ) சரியன்று ; (கா) சரி
(D) (உ) சரி (கா) சரியன்று

37. <u>உறுதிக்கூற்று</u>: (உ) காரைக்கால் பேய் என்று தம்மை அழைத்துக் கொண்டவர் ஒரு சிவனடியார்.
<u>காரணம்</u>: (கா) இல்லறம் துறந்து சிவனிடம் வேண்டிப் பேய் உருவம் பெற்றுக் கொண்டார் அவ் அடியார்.
(A) (உ), (கா) இரண்டும் சரி (B) (உ) , (கா) இரண்டும் தவறு
(C) (உ) சரி ; (கா) சரியன்று (D) (உ) சரியன்று (கா) சரி

38. உறுதிக்கூற்று: (உ) முத்தொள்ளாயிரம் என்பது ஓர் இலக்கியம்
காரணம்: (கா) மூவேந்தர் பற்றிய பாடல்களைக் கொண்டதால் அந்நூல் அப்பெயர் பெற்றது.
(A) (உ) (கா) இரண்டும் சரி
(B) (உ) சரி ; (கா) சரியன்று
(C) (உ) (கா) இரண்டும் சரியல்ல
(D) (உ) சரியன்று (கா) சரி

39. உறுதிக்கூற்று: (உ) வரதன் காளமேகம் என அழைக்கப்பட்டார்.
காரணம்: (கா) மழையைப் போல் கவிமழை பொழிந்தவர்
(A) (உ) (கா) இரண்டும் தவறு
(B) (உ) சரி ; (கா) சரியன்று
(C) (உ) (கா) இரண்டும் சரி
(D) (உ) சரியன்று ; (கா) சரி

40. உறுதிக்கூற்று: (உ) தமிழ் அச்சு உலகின் தந்தை எனச் சீகன்பால்கு அழைக்கப்படுகிறார்
காரணம்:(கா) முதன்முதல் தமிழகத்தில் அச்சுக் கூடத்தை நிறுவியவர் அவர்.
(A) (உ) சரி ; (கா) சரியன்று (B) (உ) (கா) இரண்டும் சரியல்ல
(C) (உ) சரியன்று : (கா) சரி (D) (உ) (கா) இரண்டும் சரி

41. உறுதிக்கூற்று: (உ) தொல்காப்பியம் பிசியைப் பற்றிக் குறித்துள்ளது.
காரணம்: (கா) தமிழ் நாட்டுப்புறப் பண்பாட்டில் விடுகதை ஓர் இன்றியமையாத வடிவமாகும்.
(A) (உ) (கா) இரண்டும் சரி
(B) (உ) சரி ; (கா) சரியன்று
(C) (உ) (கா) இரண்டும் சரியல்ல
(D) (உ) சரியன்று ; (கா) சரி

42. உறுதிக்கூற்று: (உ) உடலுறுப்புகளில் செடல் குத்திக் கொள்ளுதல் சில பகுதிகளில் வழக்கில் உள்ளது.
காரணம்: (கா) நேர்த்திக் கடனாக அவ்வாறு செய்யப்படுகிறது.
(A) (உ) சரி ; (கா) சரியன்று (B) (உ); (கா) இரண்டும் சரி
(C) (உ) சரியன்று ; (கா) சரி (D) (உ) (கா) இரண்டும் சரியல்ல

43. உறுதிக்கூற்று: (உ) பறையறைந் தல்லது செல்வற்க என்னா இறையே தவறுடையான் எனக் கலித்தொகை கூறுகிறது.
காரணம்: (கா) முற்காலத்தில் முரசறைந்து செய்தி பரப்பப்பட்டது.
(A) (உ) சரி ; (கா)சரியன்று
(B) (உ) (கா) இரண்டும் சரியல்ல
(C) (உ) (கா) இரண்டும் சரி
(D) (உ) சரியன்று ; (கா) சரி

**44.** <u>உறுதிக்கூற்று</u>: *(உ) பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் சங்கம் மருவிய காலத்தைச் சேர்ந்தவை.*
<u>காரணம்</u>: *(கா)அந்நூல்களை இயற்றிய புலவர்கள் பிற்சான்றோர் என அழைக்கப்பட்டனர்*

(A) *(உ) சரி ; (கா) சரியன்று*
(B) *(உ) (கா) இரண்டும் சரியல்ல*
(C) *(உ) சரியன்று ; (கா) சரி*
(D) *(உ) (கா) இரண்டும் சரி*

**45.** <u>உறுதிக்கூற்று</u>: *(உ) திருக்குறளின் காலம் சங்க இலக்கியங்கள் சிலவற்றிற்கு முற்பட்டதாக இருக்க வேண்டும்.*
<u>காரணம்</u>: *(கா)குறள் கருத்துகளையும், தொடர்களையும் சங்கப்பாடல்கள் எடுத்தாண்டுள்ளன.*

(A) *(உ) , (கா) இரண்டும் சரி*
(B) *(உ) சரி ; (கா) சரியன்று*
(C) *(உ) , (கா) இரண்டும் சரியல்ல*
(D) *(உ) சரியன்று ; (கா) சரி*

**46.** <u>உறுதிக்கூற்று</u>: *(உ) தமிழக அகழாய்வில் எடுக்கப்பட்ட பழங்கலாப் பானைகளில் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன.*
<u>காரணம்</u>: *(கா)சங்க காலத் தமிழகத்தில் கல்வியறிவு நன்கு பரவி இருந்தது*

(A) *(உ) சரி ; (கா) சரியன்று*
(B) *(உ) , (கா) இரண்டும் சரி*
(C) *(உ) சரியன்று ; (கா) சரி*
(D) *(உ) (கா) இரண்டும் சரியல்ல*

**47.** <u>உறுதிக்கூற்று</u>: *(உ) இலக்கியத்தில் நுட்பமான சொல்லாடலை உருவாக்கியது உளவியல் கூறாகும்.*
<u>காரணம்</u>: *(கா)இவ் உளவியல் அணுகுமுறையின் வளர்ச்சியாக அமைவது தொன்மவியல் திறனாய்வு*

(A) *(உ) சரி ; (கா) சரியன்று*
(B) *(உ) , (கா) இரண்டும் சரியல்ல*
(C) *(உ) , (கா) இரண்டும் சரி*
(D) *(உ) சரியன்று ; (கா) சரி*

**48.** <u>உறுதிக்கூற்று</u>: *(உ) திருக்குறளில் ஏழு நாள் கால அளவாகிய வாரத்தைப் பற்றிய குறிப்பு உண்டு.*
<u>காரணம்</u>: *(கா)பண்டைக் காலத் தமிழர் வானியல் அறிவு மிக்கவர்களாய் இருந்தனர்*

(A) *(உ) சரி ; (கா) சரியன்று*
(B) *(உ) சரியன்று ; (கா) சரி*
(C) *(உ) (கா) இரண்டும் சரியல்ல*
(D) *(உ) (கா) இரண்டும் சரி*

**49.** <u>நிரல்படுத்துக.</u>
அளவைகள்
(A) எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல்
(B) எடுத்தல், எண்ணல், முகத்தல், நீட்டல்
(C) எண்ணல், முகத்தல், நீட்டல், எடுத்தல்
(D) எண்ணல், நீட்டல், எடுத்தல், முகத்தல்

**50.** <u>நிரல்படுத்துக.</u>
திருக்குறள் பழைய உரையாசிரியர்கள்
(A) தருமர், தாமத்தர், மணக்குடவர், நச்சர்
(B) தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர்
(C) தருமர், நச்சர், தாமத்தர், மணக்குடவர்
(D) தருமர், தாமத்தர், நச்சர், மணக்குடவர்

**51.** <u>நிரல்படுத்துக.</u>
சார்பு நூல்களின் வேறு பெயர்கள்
(A) வழிநூல், கடைநூல், இடைநூல், புடைநூல்
(B) வழிநூல், புடைநூல், இடைநூல், கடைநூல்
(C) வழிநூல், இடைநூல், கடைநூல், புடைநூல்
(D) வழிநூல், இடைநூல், புடைநூல், கடைநூல்

**52.** <u>நிரல்படுத்துக.</u>
செய்யுள் வனப்புகளின் இறுதி நான்கு
(A) விருந்து, புலன், இயைபு, இழைவு
(B) விருந்து, இயைபு, இழைபு, புலன்
(C) விருந்து, இழைபு, இயைபு, புலன்
(D) விருந்து, இயைபு, புலன், இழைபு

**53.** <u>நிரல்படுத்துக.</u>
நன்னூல் கூறும் எழுத்திலக்கணத்தின் பகுதி
(A) எண், பெயர், முறை, பிறப்பு, உருவம்
(B) எண், முறை, பெயர், உருவம், பிறப்பு
(C) எண், உருவம், முறை, பிறப்பு, பெயர்
(D) எண், பிறப்பு, உருவம், முறை, பெயர்

**54.** <u>நிரல்படுத்துக.</u>
தொடை வகை
(A) மோனை, எதுகை, இயைபு, முரண்
(B) மோனை, முரண், எதுகை, இயைபு
(C) மோனை, எதுகை, முரண், இயைபு
(D) மோனை, முரண், இயைபு, எதுகை

**55.** <u>நிரல்படுத்துக.</u>
வண்ணக ஒத்தாழிசையின் நிலைக்களன்
(A) தரவு, எண், தாழிசை, வாரம்
(B) தரவு, தாழிசை, எண், வாரம்
(C) தரவு, வாரம், தாழிசை, எண்
(D) தரவு, தாழிசை, வாரம், எண்

56. நிரல்படுத்துக.
களவில் கூற்று நிகழ்த்துவோர்
(A) பார்ப்பான், தோழி, பாங்கன், செவிலி, கிழவன், கிழத்தி
(B) பாப்ப்பான், பாங்கன், செவிலி, தோழி, கிழவன், கிழத்தி
(C) பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, கிழத்தி, கிழவன்
(D) பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, கிழவன், கிழத்தி

57. நிரல்படுத்துக.
குருளைக் குரியவை
(A) நாய், பன்றி, புலி, முயல்
(B) நாய், புலி, பன்றி, முயல்
(C) நாய், முயல், பன்றி, புலி
(D) நாய், புலி, முயல், பன்றி

58. நிரல்படுத்துக.
ஐந்தாம் வேற்றுமையின் பொருள் பாகுபாடு
(A) வண்ணம், அளவு, வடிவு, சுவை
(B) வண்ணம், வடிவு, சுவை, அளவு
(C) வண்ணம், வடிவு, அளவு, சுவை
(D) வண்ணம், சுவை, வடிவு, அளவு

59. பொருத்துக:
(a) அகவல் (1) வெண்பா
(b) செப்பல் (2) கலிப்பா
(c) துள்ளல் (3) வஞ்சிப்பா
(d) தூங்கல் (4) ஆசிரியப்பா

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (4) | (1) | (2) | (3) |
| (B) | (4) | (3) | (2) | (1) |
| (C) | (4) | (2) | (1) | (3) |
| (D) | (4) | (3) | (1) | (2) |

60. பொருத்துக:
(a) பிரிநிலை (1) மன்
(b) பெருமை (2) ஓ
(c) விழைவு (3) கொன்
(d) கழிவு (4) தில்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (2) | (1) | (3) | (4) |
| (B) | (2) | (3) | (1) | (4) |
| (C) | (2) | (4) | (1) | (3) |
| (D) | (2) | (1) | (4) | (3) |

61. பொருத்துக:
(a) கெழு (1) உயர்வு
(b) தெருமரல் (2) உட்கு
(c) புரை (3) சுழற்சி
(d) உரு (4) நிறன்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (4) | (1) | (2) | (3) |
| (B) | (4) | (2) | (1) | (3) |
| (C) | (4) | (3) | (1) | (2) |
| (D) | (4) | (1) | (3) | (2) |

**62.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | மாயோன் | (1) | தீம்புனல் |
| (b) | சேயோன் | (2) | பெருமணல் |
| (c) | வேந்தன் | (3) | மைவரை |
| (d) | வருணன் | (4) | காடுறை உலகு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (4) | (1) | (3) | (2) |
| (B) | (4) | (2) | (3) | (1) |
| (C) | (4) | (3) | (2) | (1) |
| (D) | (4) | (3) | (1) | (2) |

**63.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | முல்லை | (1) | எற்பாடு |
| (b) | குறிஞ்சி | (2) | விடியல் |
| (c) | மருதம் | (3) | மாலை |
| (d) | நெய்தல் | (4) | யாமம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (3) | (4) | (2) | (1) |
| (B) | (3) | (2) | (4) | (1) |
| (C) | (3) | (1) | (4) | (2) |
| (D) | (3) | (4) | (1) | (2) |

**64.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | தெலுங்கு நூல்களை மொழிபெயர்த்தவர் | (1) | பி.டி.சித்திலிங்கையா |
| (b) | கன்னட நூல்களை மொழிபெயர்த்தவர் | (2) | சரசுவதி இராமநாத் |
| (c) | மராத்தி நூல்களை மொழிபெயர்த்தவர் | (3) | மு.கு.ஜகந்நாத ராஜா |
| (d) | இந்தி நூல்களை மொழிபெயர்த்தவர் | (4) | கா.ஸ்ரீ.ஸ்ரீ. |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (3) | (4) | (1) | (2) |
| (B) | (3) | (1) | (4) | (2) |
| (C) | (3) | (4) | (2) | (1) |
| (D) | (3) | (2) | (1) | (4) |

**65.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | என்கதை | (1) | கண்ணதாசன் |
| (b) | வனவாசம் | (2) | உ.வே.சா. |
| (c) | என்சரித்திரம் | (3) | ம.பொ.சி. |
| (d) | எனது போரட்டங்கள் | (4) | நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (4) | (1) | (2) | (3) |
| (B) | (4) | (2) | (1) | (3) |
| (C) | (4) | (3) | (2) | (1) |
| (D) | (4) | (1) | (3) | (2) |

66. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | பிரபஞ்சன் | (1) | கல்மரம் |
| (b) | பொன்னீலன் | (2) | சாய்வு நாற்காலி |
| (c) | தோப்பில் முகமது மீரான் | (3) | வானம் வசப்படும் |
| (d) | திலகவதி | (4) | புதிய தரிசனங்கள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (3) | (2) | (1) | (4) |
| (B) | (3) | (4) | (2) | (1) |
| (C) | (3) | (2) | (4) | (1) |
| (D) | (3) | (1) | (2) | (4) |

67. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | அம்பை | (1) | ஆனந்தாயி |
| (b) | ஹெப்சிபா ஜேசுதாசன் | (2) | கரிப்புமணிகள் |
| (c) | சிவகாமி | (3) | அந்தி மாலை |
| (d) | இராஜம் கிருஷ்ணன் | (4) | மா-னீ |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (3) | (4) | (2) | (1) |
| (B) | (3) | (2) | (1) | (4) |
| (C) | (3) | (4) | (1) | (2) |
| (D) | (3) | (1) | (4) | (2) |

68. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | பூஜ்ஜியங்களின் சங்கிலி | (1) | மேத்தா |
| (b) | நேயர் விருப்பம் | (2) | சிற்பி |
| (c) | ஊமை வெயில் | (3) | அப்துல் ரகுமான் |
| (d) | ஒரு வானம் ஒரு சிறகு | (4) | ஈரோடு தமிழன்பன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (2) | (4) | (1) | (3) |
| (B) | (2) | (1) | (3) | (4) |
| (C) | (2) | (3) | (1) | (4) |
| (D) | (2) | (3) | (4) | (1) |

69. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ் | (1) | ஒட்டக்கூத்தர் |
| (b) | அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ் | (2) | ராய.சொக்கலிங்கம் |
| (c) | குலோத்துங்கச் சோழன் பிள்ளைத்தமிழ் | (3) | குமரகுருபரர் |
| (d) | காந்தி பிள்ளைத்தமிழ் | (4) | மீனாட்சி சுந்தரம் பிள்ளை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (3) | (4) | (1) | (2) |
| (B) | (3) | (1) | (4) | (2) |
| (C) | (3) | (2) | (1) | (4) |
| (D) | (3) | (2) | (4) | (1) |

**70.** *பொருத்துக:*

| | | | |
|---|---|---|---|
| (a) | மீன்பாட்டம் | (1) | முயற்சி |
| (b) | சிறுபாடு | (2) | ஒறுப்புக்கட்டணம் |
| (c) | அரும்பாடு | (3) | வரி |
| (d) | மன்றுபாடு | (4) | சேமிப்பு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (3) | (1) | (4) | (2) |
| (B) | (3) | (4) | (1) | (2) |
| (C) | (3) | (1) | (2) | (4) |
| (D) | (3) | (2) | (1) | (4) |

**71.-75.** *பின்வரும் பகுதியைப் படித்துப் பார்த்துத் தொடர்ந்து இடம் பெற்றுள்ள வினாக்களுக்கு ஏற்ற விடையைச் சுட்டுக.(71 – 75)*

*பண்டைக் காலத் தமிழகத்து நாணயங்கள் காசு, காணம் என அழைக்கப்பட்டன. அண்மையில் செங்கம் என்னும் இடத்தில் 120 காசுகள் கிடைத்துள்ளன. இக்காசுகளில் ஒரு புறம் "திண்ணன் எதிரான் சேந்தன்அ" என்று பண்டைய தமிழ் எழுத்துக்கள் உள்ளன. இவை கி.பி. 2 ஆம் நூற்றாண்டிற்கு உரியவை. தமிழ் எழுத்துக்கள் உள்ள காசுகளில் இவை மிகவும் தொன்மையானவையாகும்.*

*தங்கத்தைத் தொழில் நுட்ப முறையில் கையாளத் தெரிந்தவர்களாகத் தமிழர்கள் பண்டைக்காலந் தொட்டே இருந்துள்ளனர். பல்வேறு அணிகலன்களை அழகுணர்ச்சியோடு அவர்கள் படைத்தனர். தலையணிவகை, மூக்கணிவகை, இடையணிவகை, துடையணிவகை, பாதவணிவகை, கால் விரலணிவகை என்று வகை வகையான அணிகளை உருவாக்கினர். இவற்றால் அணிகலன் செய்யும் தொழில் நுட்பம் அந்நாளில் மேம்பாடு கண்டிருந்தது தெளிவாகிறது.*

*அறிவாற்றல் நிறைந்த பண்டைத் தமிழர்கள் நாகரித்தில் உயர்ந்த நிலையில் இருந்தனர். வணிகத்திலும் அவர்கள் வல்லவர்களாகத் திகழ்ந்தனர். உரோம் நாடு பொன் தகடுகளை அளித்துத் தமிழ் நாட்டிலிருந்து மிளகு, இலவங்கம், தந்தம், சந்தனம், முதலான பொருட்களையும், முத்து, மணிகள் முதலான விலையுயர்ந்த பொருள்களையும் வாங்கிச் சென்றதால் உரோம் நாடு பொன்னை இழந்து வறுமையுற்றது என மூத்த பிளினி (கி.பி. 70) என்ற உரோம வரலாற்று ஆசிரியர் நொந்து கொண்டுள்ளார்.*

*இவ்வாறே இராசராச சோழனின் ஆட்சிப் பரப்புக்குள் தென்னிந்தியா முழுமையும் மட்டுமன்றிக் கீழ்த்திசை நாடுகளும் இருந்தன. பண்டைத் தமிழர்களிடமிருந்து வீர உணர்ச்சிக்கு இவை தக்க எடுத்துக் காட்டுகளாகும். கணித வானியல் அறிவாற்றலுடன் பெரு வழிகளை அமைத்தல், கப்பல் கட்டுதல் முதலான தொழில்களிலும் அவர்கள் மேம்பட்டிருந்தனர். ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே கிரேக்க நாட்டுடன் பாண்டியநாடு கடல்*

வழியாக வணிகத் தொடர்பு கொண்டிருந்தது. பாண்டிய மன்னனின் தூதுவன் ஒருவன் உரோம் நாட்டு அரசன் அகஸ்டசைக் கடல்வழியாகச் சென்று சந்தித்து வணிகம் தொடர்பான ஒப்பந்தம் செய்து கொண்டதற்கு வரலாற்றுச் சான்றுகள் உண்டு.

**71.** தமிழ் எழுத்துக்களின் பழமையை மெய்ப்பிக்கும் காசுகள் கிடைத்த ஊர்

(A) கரூர் (B) காருக்காக்குறிச்சி
(C) செங்கம் (D) கொடுமணல்

**72.** உரோம் நாட்டினர் பொன்னைக் கொடுத்து வாங்கிச் சென்ற தமிழகப் பொருள்கள்

(I) மிளகு, தந்தம் (II) மிளகு, வெள்ளி
(III) தந்தம், சந்தனம் (IV) இலவங்கம், முத்து

இவற்றுள்

(A) I,II, III சரி (B) II, III, IV சரி
(C) I, III, IV சரி (D) III, II, IV சரி

**73.** பொருத்துக:

(a) உரோம் பொன்னை இழந்தது (1) இராசராசன்
(b) தென்திசை நாடு கொண்டான் (2) பிளினி
(c) கணித வானியல் அறிவு (3) அகஸ்டஸ்
(d) பாண்டியனின் தூதுவன் சந்தித்த அரசன் (4) கப்பல் கட்டுதல்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (2) | (3) | (1) | (4) |
| (B) | (2) | (1) | (4) | (3) |
| (C) | (2) | (4) | (3) | (1) |
| (D) | (2) | (4) | (1) | (3) |

**74**. உறுதிக்கூற்று: (உ) பண்டைத் தமிழர் தொழில் நுட்ப முறையால் அணிகலன் செய்தனர்.

காரணம்: (கா)கலஞ்செய் கம்மியர் தொழில் நுட்பம் வல்லவர்கள்

(A) (உ) சரி , (கா) சரியன்று
(B) (உ) , (கா) இரண்டும் சரி
(C) (உ) சரியன்று , (கா) சரி
(D) (உ) (கா) இரண்டும் சரியல்ல

**75.** நிரல்படுத்துக.

அணிகலன்கள்

(A) தலையணி, துடையணி, இடையணி, மூக்கணி
(B) தலையணி, துடையணி, மூக்கணி, இடையணி
(C) தலையணி, இடையணி, மூக்கணி, துடையணி
(D) தலையணி, மூக்கணி, இடையணி, துடையணி

**Space For Rough Work**